### கன்னியாகுமரி மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவாக சூறாவளி சுற்றுப்பயணம்!

# இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக இருக்கும் நம் முதலமைச்சரை, மீண்டும் முதலமைச்சராக்கக் கூடிய தேர்தல் என்பதை மறவாதீர்!

## பத்மநாபபுரம் – கிள்ளியூர் – விளவங்கோடு – குளச்சல் தொகுதிகளில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பு!



**கன்னியாகுமரி,ஏப்.15–**

**கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாப புரத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவாக, பத்மநாபபுரம்–கிள்ளியூர்–விளவங்கோடு–குளச்சல் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றி வேட்பாளர்கள் தோழர் செல்லசுவாமிக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திலும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செ.ராஜேஷ்குமார், டி.டி.பிரவீன், தாரகை கத்பர்ட் ஆகியோருக்கு கை சின்னத்திலும் வாக்களிக்கும்படி கேட்டு நேற்று வாக்குகள் சேகரித்துப் பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் இவ்வளவு சிறப்பான, உற்சாகமான வரவேற்பு கொடுத்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த பத்மநாபபுரம் தொகுதிக்கு வருகை தந்து நம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வெற்றி வேட்பாளர் செல்லசுவாமி அவர்களுக்கு நீங்களெல்லாம் அரிவாள் சுத்தியல் நட்சத்திரச் சின்னத்தில் வாக்களித்து, இந்தச் சட்டமன்றத் தேர்தலில் பத்மநாபபுரம் தொகுதியில் மிகப்பெரிய வெற்றியை நீங்களெல்லாம் தேடித்தருவீர்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறேன்.

#### ஒரு பிறவிப் போராளி

இங்கே நம் வேட்பாளர் செல்லசுவாமி அவர்களைப் பற்றி, உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. அனைவருக்கும் தெரிந்தவர்தான். ஒட்டுமொத்த கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருபவர். அவர் ஒரு பிறவிப் போராளி. மக்களுக்கான எல்லாப் போராட்டங்களையும் மக்களோடு மக்களாக நின்று அந்தப் போராட்டங்களை எல்லாம் சந்தித்தவர். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர். உங்களுக்கான எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் நீங்கள் செல்லசுவாமி அவர்களிடம் சொல்லலாம். அவரை நீங்கள் தேடிப் போக வேண்டாம். அவரே உங்களைத் தேடி உங்கள் வீடு வந்து உங்களுக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்து அதை நிச்சயம் செய்து கொடுப்பார். ஏனென்றால் அவர் வீட்டில் இருப்பதைவிட எப்பொழுதுமே களத்தில் உங்களோடு, மக்களோடு மக்களாக இருக்கக்கூடியவர்.

#### சட்டமன்றத்தில் ஒலிக்க வேண்டும்

தன் செயல்பாடுகளால் அனைத்துத் தரப்பினரின் நன்மதிப்பையும் பெற்றவர். அவரின் குரல் நிச்சயம் இந்த முறை சட்டமன்றத்தில் ஒலிக்க வேண்டும். அதற்கு நீங்கள் அனைவரும் வருகின்ற தேர்தலில் அரிவாள் சுத்தியல் நட்சத்திரச் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் செல்லசுவாமி அவர்களை நீங்கள் வெற்றி பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பத்மநாபபுரத்தில் மீண்டும் இந்த ஒரு வாய்ப்பு கொடுங்கள். நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாய்ப்பு கொடுங்கள் என்று எந்த உரிமையில் வந்து கேட்கிறேன்? ஏற்கனவே இந்தத் தொகுதிக்கு நம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய அமைச்சர் அண்ணன் மனோ தங்கராஜ் அவர்கள் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். உங்களோடு இருந்திருக்கிறார். அந்த உரிமையில் உங்களையெல்லாம் சந்தித்து வாய்ப்புக் கேட்க வந்திருக்கிறேன். உதாரணத்துக்குச் சில திட்டங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

#### பத்மநாபபுரம் திட்டங்கள்

7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருவிக்கரையிலிருந்து மாத்தூர் தொட்டிப்பாலம் வரைக்கும் உயர்மட்ட இணைப்புப் பாலம் அவர் கட்டிக் கொடுத்தது.

தக்கலையிலிருந்து பேச்சிப்பாறை வரைக்கும் செல்லுகின்ற வகையில் பல்வேறு இடங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகள். திற்பரப்பு பகுதியிலே சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி. 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேர்கிளம்பியிலிருந்து அழகிய மண்டபம் வரைக்கும் இன்றைக்குச் சாலைப் பணிகள். திற்பரப்பு நீர்வீழ்ச்சி செல்கின்ற சாலையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவட்டாரில் புதிய பேருந்து நிலையம் அமைந்திருக்கிறது என்றால், அது நம் திராவிட மாடல் அரசு மற்றும் நம் முதலமைச்சர் அவர்கள் கட்டி கொடுத்துள்ளார்கள்.

ஜீரோ பாயிண்ட் முதல் கோதையார் வரை 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு சாலைப் பணிகளும் நடைபெற்றிருக்கின்றன. இத்தனை பணிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். செல்லசுவாமி அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினீர்கள் என்றால், இந்தத் தொகுதிக்கு என்னென்ன தேவையோ அதை நம் திராவிட மாடல் அரசு நிச்சயம் உங்களுக்குச் செய்து கொடுக்கும் என்று உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

#### 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன்

ட்சி அமைந்த உடனே நம் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிரின் கைகளிலும் 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன் வழங்கிவிடுவார். அந்த 8,000 ரூபாயில் வீட்டுக்குத் தேவையான மின்சாதனப் பொருட்களை, நீங்களே (மகளிர்) முடிவு செய்து வாங்கிக்கொள்ளலாம். இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும். அதற்கு இந்தப் பத்மநாபபுரம் தொகுதியில் தோழர் செல்லசுவாமி அவர்களுக்கு ‘அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்’ சின்னத்திலும், கிள்ளியூர் தொகுதியில் சகோதரர் ராஜேஷ்குமார் அவர்களுக்கு ‘கை’ சின்னத்திலும், விளவங்கோடு தொகுதியில் சகோதரர் பிரவீன் அவர்களுக்கு ‘கை’ சின்னத்திலும், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் சகோதரி தாரகை கத்பர்ட் அவர்களுக்கு ‘கை’ சின்னத்திலும் வாக்களித்து, நீங்கள் மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் குறித்து, நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்வது போலத்தான், இது சாதாரணத் தேர்தல் அல்ல. இது டெல்லி அணிக்கும் தமிழ்நாடு அணிக்கும் இடையிலான போட்டி. டெல்லி அணி ஜெயிக்கிறதா அல்லது தமிழ்நாடு அணி ஜெயிக்கிறதா என்பதை இந்தத் தேர்தலில் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இவ்வளவு நலத்திட்டங்கள் செய்திருக்கிறோம், இவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்; யோசித்துப் பாருங்கள், ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டுக்கு என்று ஏதாவது திட்டங்களை ஒதுக்கியிருக்கிறார்களா? நாம் கேட்கும் நிதியைக் கொடுக்கிறார்களா? எந்த உதவியும் செய்வதில்லை.

#### நிதி ஒதுக்கீடு செய்யவில்லை

இப்போது தேர்தல் வருகிறது என்றவுடன் மோடி அவர்கள் வாராவாரம் வருகிறார். நாளை இங்கே கன்னியாகுமரி வருகிறார். வரும்போது கேளுங்கள், தமிழ்நாட்டுக்கு என்ன திட்டங்கள் கொடுத்தீர்கள் என்று கேளுங்கள். எந்தத் திட்டமும் கொடுப்பதில்லை. கல்விக்கான நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய நிதியைக் கொடுப்பேன் என்று சொல்கிறார்கள். மும்மொழிக் கொள்கை என்று கூறி, மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இந்தித் திணிப்பை எப்படியாவது கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் இன்று ஒன்றிய அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அதனால்தான் நம் தலைவர் மீண்டும் மீண்டும் சொல்வது போல, நம் தமிழ்நாடு என்றுமே டெல்லிக்குக் அவுட் ஆப் கண்ட்ரோல் தான் என்பதை இந்தத் தேர்தல் மூலம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

அ.தி.மு.க. என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு இன்று பா.ஜ.க தமிழ்நாட்டுக்குள் எப்படியாவது நுழைய வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய பல மாநிலங்களை பா.ஜ.க. தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டது, ஆனால், தமிழ்நாட்டுக்குள் மட்டும் நுழைய விட மாட்டோம். ஏனெனில் தமிழ்நாடு என்றுமே சுயமரியாதை மண். நாம் யாருக்கும் அடிமையாக இருக்க மாட்டோம். யாராக இருந்தாலும் கேள்வி கேட்போம்.

#### தொகுதி மறுவரையறை

இன்றைக்குக் கூட நம் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 16–ஆம் தேதி நாடாளுமன்றத்தைக் கூட்டியிருக்கிறார்கள். எதற்கு? தொகுதி மறுவரையறை கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டு வந்தால், 39 நாடாளுமன்றத் தொகுதிகள் தமிழ்நாட்டிலிருந்து 32–ஆகக் குறைக்கப்படும். எண்ணிக்கையைக் குறைக்கிறார்கள். இதைப் பற்றி இந்தியாவிலேயே முதல் முதலமைச்சராக, முதல் தலைவராக ஒரு வருடத்துக்கு முன்பே பேச ஆரம்பித்தது நம் தமிழ்நாடுதான். இப்படி இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய நம் முதலமைச்சர் அவர்களை மீண்டும் முதலமைச்சராக்கக் கூடிய தேர்தல்தான் வரவிருக்கும் ஏப்ரல் 23 சட்டமன்ற தேர்தல்.

உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக சொல்ல வேண்டும் என்றால் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். நம் வெற்றி வேட்பாளர்களுக்கெல்லாம் பிரச்சாரம் செய்து மிகப்பெரிய வெற்றியை இந்தச் சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் பெற்றுத் தர வேண்டும்.

உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

வெற்றி வேட்பாளர்கள் தோழர் செல்லசுவாமி, ராஜேஷ்குமார், பிரவீன், சகோதரி தாரகை கத்பர்ட், மாவட்ட கழகச் செயலாளர் மனோ தங்கராஜ், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் அருளானந்த ஜார்ஜ், ஜான் பிரைட், ஜான்சன், சுஃபி கான், செல்வகுமார், சோழராஜன், சுந்தர்ராஜ், ஜெபித் ஜோஸ், ஜான், சதீஷ், நசீர், டட்லி, பிரைட் சிங், ஹாஜி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெகநாதன், துணை அமைப்பாளர்கள் ஜான் ஜெபர்சன், விஜயஸ் ஜீவன், ஜெயச்சந்திர பூபதி, இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மய்யம், எஸ்.டி.பி.ஐ உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

---

### ச.பரமசிவம் – வே.கௌதமன் – மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி. பங்கேற்பு!

## அண்ணாநகர் 101 வது வட்டத்தில் கழக வேட்பாளர் நே.சிற்றரசு ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

### வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் அறிக்கை!

சென்னை, ஏப். 15 -

அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டம், 76, 77, 78, 79, 75 ஆகிய பாகங்களில் இன்று (15.04.2026 - புதன் கிழமை) மாலை 4 மணியளவில், குஜ்ஜி பிரதான சாலை கதவு எண். 1 முதல் 363 வரை, குஜ்ஜி 2 வது தெரு, குஜ்ஜி 1 வது குறுக்கு தெரு, குமரன் நகர் 1 முதல் 3 வது தெருக்கள் வரை மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் நே. சிற்றரசுவை ஆதரித்து கழக நிர்வாகிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கின்றனர்.

101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார்.

அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், தொகுதிப் பார்வையாளர் வே.கௌதமன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை யில் வகிக்கின்றனர்.

எனவே வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகி கள், கழக முன்னோடி கள் பலர் கலந்து கொண்டு வாக்கு சேகரிக்கின்றனர்.

இவ்வாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

## மயிலை கிழக்குப் பகுதி 171 ‘அ’ வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

### பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, ஏப். 15-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி 171 ‘அ’ வட்டத்தில் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பு இன்று (15.04.2026 - புதன்கிழமை) நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2,BDO,BDA மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காலை 8.00 மணியளவில் வாக்கு சேகரிக்கும் இடங்கள் : சீனிவாசபுரம், எம்.ஆர்.சி. நகர், ராணி மெய்யம்மை டவர், தாண்டவராயன் தெரு, வசந்த் அவின்யூ, கற்பகம் அவின்யூ 1வது4வது தெரு, சாய்நகர், காவலர் குடியிருப்பு, ராபர்ட்சன் தெரு, சாலையர் தெரு, ராஜா கிராமணி தோட்டம், ராஜாதெரு, வேலாயுத ராஜா தெரு, அப்பாவு கிராமணி தெரு, நாராயண செட்டி தெரு ஆகிய இடங்களில் வாக்கு சேகரிக்கின்றனர்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி அறிக்கை விடுத்துள்ளார்.